**பலாங்கொடை பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாங்கொடை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட சபைக்குச் சொந்தமான 12 காணிகளுக்குரிய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்கு புதிய நீர் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 25,841 தொகை மீண்டெழும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 37,195 தொகையான நிர்மாண களஞ்சிய ஆரம்ப இருப்பு மற்றும் ரூபா 148,290 தொகை நிர்மாண களஞ்சிய இறுதியிருப்பு என்பன உரிய செலவினக் கணக்குகளில் சீராக்கப்படாமல் திரண்ட நிதியத்திலும் பற்றாக்குறைக் கணக்கிலும் சீராக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ஏக்கர் வரியான ரூபா 29,043 தொகையை 2017 யூன் வரையிலும் அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற சந்தை அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 97,500 தொகையை 2017 யூன் வரையிலும் அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரியதாகக் கிடைக்கவேண்டிய நிலுவையான வெலிஓய கடை வாடகையான ரூபா 17,943 தொகையை 2017 யூன் வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009, 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 224,770 கூட்டுத்தொகையான 05 செலவினக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்ப்பதற்கு 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குரியவர்களின் குடியிருப்பிற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட யஹகளு மூகலான பிரதேசத்தின் 11 நிலக் கூறுகளுக்காக அறவிட வேண்டிய வாடகையான ரூபா 36,000 தொகையினை அறவிடுவதற்கு 2017 யூலை சரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதேச சபையினை வலுபடுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 முற்பணத்திலிருந்து செயற்திட்டத்தை அமுல்படுத்தியதன் பின்னர் சேமிக்கப்பட்ட ரூபா 515,521 தொகை 2017 யூன் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 04 நிலையான சொத்து விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை மற்றும் ஏனைய 02 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான காலப்பகுப்பாய்வு அறிக்கை, மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 95,798,171 கூட்டுத்தொகையான 23 நாட்குறிப்புக்களுக்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறவேண்டிய, முன்கொண்டுவரப்பட்ட மற்றும் இறுதியிருப்புக்களுடன் தொடர்பான 18 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 49,915,954 கூட்டுத் தொகையான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 978,855 தொகையிலிருந்து ஒவ்வொரு |

| | | |
|---|---|---|
| | | அரையாண்டின் போது உரிமை கோரப்படாத ‘‘காலாவதியான’’ வைப்புக்கள் தொடர்பான பட்டியல் தயாரித்து வைப்பினை ஓய்வுபெறச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(1),(3),(4) மற்றும் 110 | விபத்தொன்றிலிருந்து ரூபா 655,114 நட்டம் ஏற்பட்டிருந்த வாகனமொன்று தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விபத்தின் இழப்பு தொடர்பாக பதிவேடொன்றில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 137 | சேவைக்காக, வேலைக்காக அல்லது வழங்கலுக்காக செலுத்தப்பட்ட ரூபா 84,260 கூட்டுத்தொகையான 09 கொடுப்பனவுகள் சபைச் செயலாளரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தன. |
| (iv) | நிதிப்பிரமாணம் 371(5) | 1992 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபா 474,279 கூட்டுத்தொகையான 35 உப கட்டுநிதிகள் 2017 யூன் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| (i) | III ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் விதி | சேகரிக்கப்பட்ட மொத்தப் பணமும் தினந்தோறும் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் ரூபா 75,000 முதல் ரூபா 200,000 வரை சபையின் |

| | | |
|---|---|---|
| | | நாளாந்த வருமானம் 02 நாட்கள் முதல் 06 நாட்கள் வரை கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | VII ஆம் அத்தியாயத்தின் 165 ஆம் விதி | ரூபா 51,704,278 கூட்டுத்தொகையான வருமானம் மற்றும் ரூபா 44,220,202 கூட்டுத்தொகையான செலவினம் தொடர்பாக பிரதான பேரேட்டில் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | VIII ஆம் அத்தியாயத்தின் 178 ஆம் விதி | ஏதாவதொரு வேலை, வழங்கல் அல்லது சேவையொன்று ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வருடத்திற்காகவும் ஆகக்குறைந்தது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பெறுகைகள் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | XII ஆம் அத்தியாயத்தின் 214 ஆம் விதி | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 148,290 தொகையான நிர்மாணக் களஞ்சிய இருப்பு தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1975 இன் உள்ளூராட்சி ஓய்வூதியக் கட்டளையின் 36 ஆம் பிரிவு | 1993 செப்தெம்பர் 03 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 1,140,334 கூட்டுத்தொகையான உள்ளூராட்சி |

ஓய்வூதிய பங்களிப்புப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சப்ரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை

(i) 03 (ii) ஆம் பிரிவு

காணி விற்பனைகளுக்குரிய கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் காணிகளை விற்பனை செய்வதன் கீழ் நிலக்கூறுகளின் விற்பனைப் பெறுமதி தொடர்பாக சபையின் வரமானப் பரீட்சகர் / கட்டுப்பாட்டாளரினால் தற்காலிக மதிப்பீடொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி விற்பனையின் அடிப்படையில் வரித் தொகையான ரூபா 893,180 தொகை பெறப்பட்டிருந்த 09 காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 03(iv) ஆம் பிரிவு

2015 ஆம் ஆண்டு முதல் 2017 யூன் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி விற்பனையின் அடிப்படையில் வரித்தொகை ரூபா 1,245,894 தொகை பெறப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 13 காணிகள் தொடர்பாக விற்பனையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(உ) 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவை

(i) 2.5.1(ஊ) வழிகாட்டி

தாமஹன சுடலைக் கூடத்திற்காக மூன்று சுற்று மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று ரூபா 995,000 தொகையில் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருந்த போதிலும், அதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 9.3.1 ஆம் வழிகாட்டி

ரூபா 200,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தல்களைச் செய்தல் தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் விபத்துக்குட்பட்டிருந்த வாகனமொன்று ரூபா 655,114 தொகையில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 யூலை 15 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை மற்றும் 2013 யூன் 05 ஆந் திகதிய PCMO/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம்

செயற்பாடற்ற நிலையின் காணப்படுகின்ற மோட்டார் சைக்கிள் ஒன்று, கெப்வண்டி, நாக்கு சக்கர உழவு இயந்திரங்கள் இரண்டு, இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் மூன்று, நான்கு உழவு இயந்திரப் பெட்டிகள், 22 உழவு இயந்திர பாகங்கள் மற்றும் 02 கொங்கிரீட் கலவைகள் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை

49 பதவியணியினர்களைக் கொண்டுள்ள சபையின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான

கைவிரல் அடையாள இயந்திரமொன்றைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,957,476 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,579,926 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 8,377,550 தொகையான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் ரூபா 5,517,545 இனால் அதிகரித்தமையும், ஆளணி வேதனங்கள் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 3,910,800 இனால் குறைவடைந்தமையும் மேற்கூறபப்பட்ட நிதிவிளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆதனவரி

அறவிட முடியாத ரூபா 186,988 தொகையான நிலுவை ஆதனவரி கட்டணத்தை உள்ளடக்கி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிலுவையாக இருந்த ஆதனவரிக் கட்டணம் ரூபா 213,312 தொகை 2017 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 9,002,875 தொகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்கவேண்டிய

முத்திரைக் கட்டணம் என்பன மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீதிமன்றத் தண்டப் பணம்

மீளாய்வாண்டிற்குரியதாக அறவிடவேண்டிய ரூபா 856,767 தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2017 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) நீர்க் கட்டணம்

2009 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 14,440 தொகையான கிடைக்க வேண்டிய நீர்கட்டணம் 2017 யூன் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபைக்குக் கிடைத்திருந்த 03 உழவு இயந்திரங்களை சபைக்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக 69 ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 280,711 தொகையான ஒப்பந்த பிணைப் பணம் தொடர்பாக 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 யூன் 20 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் சபை அலுவலகத்தின் கராஜிற்கு இடையூறாகக் காணப்பட்ட வெட்டி

அகற்றப்பட்டிருந்த பலாமரக் குற்றிகளை கிழித்து பலகைகளாக ஆக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அத்தீர்மானம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய நான்காண்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,160,000 தொகையான 44 செயற்திட்டங்களிலிருந்து ரூபா 2,400,000 தொகையான 04 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 04 செயற்திட்டங்களின் மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 832,571 பெறுமதியான 752 கல்வனைஸ் குழாய்கள் 03 வருடங்கள் அளவிலான காலமாக சபை வளவில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கராஜில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டில் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தவதற்கு இனங்காணப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியுடைய வெலிஓய வாராந்த சந்தைக் கடைகள் மற்றும் சந்தை வளவை புனரமைப்பு செய்யும் செயற்திட்டம் என்பன 2017 யூன் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---

தாமஹன சுடலைக்கூட நிர்மாணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுடலைக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக் கம்பனியால் 2016 சனவரி 26 ஆந் திகதி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 7,966,556 தொகையான இறுதி பட்டியலில் குறைபாடு காணப்பட்டமையால் அதனை சிபாரிசு செய்வதற்கு முடியாதிருந்ததாக வெலிகேபொல பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2016 ஆகஸ்ட் மாதத்தில் அறிவித்திருந்த போதிலும், அது தொடர்பாக 2017 யூன் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆகக் குறைந்தது 85 பூதவுடல்கள் தகனம் செய்யப்பட்டதன் பின்னர் சுடலைக்கூடம் சேவிஸ் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 யூன் மாதம் புனரமைக்கப்பட்டதன் பின்னர் அதனை சேர்விஸ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சுவரில் அதிகமாக புகை வெளியேறியமையால் 2016 திசெம்பர் முதல் சுடலைக்கூடம் மூடப்பட்டிருந்தது.

(இ) திடீரென தீ ஏற்படுமாயின் அதனை அணைப்பதற்காக தீயணைப்பு உபகரணங்களின் 02 தொகுதிகள் சுடலைக் கூடத்தில் பொருத்துவதற்காக 2015 மே 15 ஆந் திகதி எடுக்கப்பட்ட சபைத்தீர்மானம் 2017 யூன் வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 5,505,318 கூட்டுத்தொகையான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 8,855 பெறுமதியான 23 சிறுவர் பிளாஸ்டிக் கதிரைகள் 2001 ஆம் ஆண்டு முதல் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூன்றாம் சேவை மட்டத்தில் அரச முகாமைத்துவ உதவியாளர் அதிவிஷேட தரத்தில் செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அரச முகாமைத்துவம் தரம் II இல் உத்தியோகத்தருக்கு 2011 ஆம் ஆண்டு முதல் செயலாளர் பதவியின் பதிற்கடமைக்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) வருமானப் பரிசோதகர், வேலை மேற்பார்வையாளர், சுடலைக்கூட செயற்படுத்துனர், ஆயுர்வேத மருந்து கலவையாளர், சுகாதாரத் தொழிலாளி, நூலகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கனரக வாகன இயந்திர செயற்படுத்துனர், நூலக உதவியாளர், வேலைத்தள தொழிலாளர் போன்ற பதவிகளில் காணப்படுகின்ற 26 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

எடுக்காமையினால் உரிய பணிகள் மற்றும் நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதவற்கு தடையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை வேறுபடுத்தாமல் சபை அதிகாரப் பிரதேசத்தில் சில இடங்களில் அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் மூலம் கொடகும்புற கிராம உத்தியோகத்தர் பிரிவில் அனிச்சியாவத்த ஹேன என்ற பெயருடைய இடத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக வனபாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ஒரு ஏக்கர் காணி ரூபா 22,600 வருடாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும், பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக, அந்தக் காணி கைவிடப்பட்டிருந்தது. அவ்வாறே கழிவுப்பொருள் அகற்றுவதற்காக பொருத்தமான இன்னுமொரு இடத்தை கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 46.39 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 29.47 மில்லியன் ஆனமையால் நிதிஏற்பாடுகளில் ரூபா 16.92 மில்லியன் அதாவது 37 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மூலதனச் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 27.83 மில்லியனாக இருந்ததுடன், உள்ளபடியான செலவினம் ரூபா 14.75 மில்லியனாக இருந்தமையால் நிதிஏற்பாடுகளில் ரூபா 13.08 மில்லியன் அதாவது 47 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபைக்குச் சொந்தமான இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமையால் ரூபா 3,300,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான வருமானம் ரூபா 503,580 ஆனமையால் அந்த வருமானம் 85 சதவீதத்தால்

குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) | வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறைத்தும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டமை |
| | | (iii) | வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்படாமை. |
| | | (iv) | இறுதியிருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவின நிதிஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க சேமிப்புக் காணப்பட்டமை |
| | | (ii) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | வருகை, வெளிச் செல்கை பதியப்படாமை |
| | | (iii) | வெளிச் செல்லல் பதிவேடு முறையான பிரகாரம் பேணப்படாமை |
| (உ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | முறையான வகையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்படாமை |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | திட்டத்தின் படி வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| | | (ii) | நிர்மாணம் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை |